# காஞ்சிபுரம் பெருநகராட்சி
## கூட்ட எண். 7/ 2019-2020

## 2019-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ம் தேதி வியாழக் கிழமை மாலை 4.00 மணிக்கு நடந்த அவசரக் கூட்டத்தின் நடவடிக்கைகள்.

**முன்னிலை**
**திரு.கா. மகேந்திரன், பி.இ.,**
**தனி அலுவலர்**

1. காஞ்சிபுரம் நகராட்சி 51 வார்டுகளைக் கொண்ட பெருநகராட்சியாக செயல்பட்டு வருகிறது. நகரப் பகுதியில் உள்ள மக்கள் தொகையுடன் மேலும் நகரப் பகுதிக்கு வந்து செல்லும் மக்கள் தொகையால் பொதுசுகாதாரம் பெரிதும் பாதிக்கப்படும் அபாயம் இருப்பதாலும், தற்போது வரவிருக்கும் பருவ மழைக் காலங்களில் ஏற்படும் டெங்கு, சிக்கன் குனியா போன்ற நோய் தொற்றுகளை தடுக்க வீடு வீடாக சென்று ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளவும், தடுப்பு நடவடிக்கைகளை உடனுக்குடன் எடுக்கவும் நகரமன்ற தீர்மான எண். 297 / 31.10.2017ன்படி 157 டெங்கு நோய் தடுப்பு பணியாளர்கள் (DBC) பயன்படுத்தப்பட்டும் பின்னர் நகரமன்ற தீர்மான எண். 164 / 31.07.2018–ன்படி கூடுதலாக 43 பணியாளர்களும் அமர்த்திக் கொள்ள ஒப்புதல் பெறப்பட்டு அவர்களுக்கான பொதுசுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு துறையினரால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி நாள் ஒன்றுக்கு ரூ.200 / – வீதம் நகராட்சி நிதியிலிருந்து வழங்கப்பட்டு வரப்படுகிறது.

மேற்படி டெங்கு நோய் தடுப்பு பணியாளர்களின் பணி அவசியமானதாக உள்ளதால் மேற்படி பணியாளர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு அவர்களது 05.10.2019ம் தேதிய ஆய்வுக்கூட்டத்தில் தற்போது வழங்கப்படும் தினக்கூலி ரூ.200/– ஐ மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் வருடாவருடம் வழங்கப்படும் தினக்கூலி விலை விகிதப்படி நிர்ணயம் செய்து வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளதாக துப்புரவு ஆய்வர்கள் மற்றும் நகர்நல அலுவலர் அவர்களது 14.10.2019ம் தேதிய குறிப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே இனிவரும் நாட்களில் வருடாவருடம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் விலை விகிதத்தில் தினக்கூலி நிர்ணயம் செய்யவும், தற்போது 2019–20ம் ஆண்டுக்கான விலை விகிதப்பட்டியலில் வ.எண்.17ல் கண்டுள்ளவாறு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.342/ – நிர்ணயம் செய்து வழங்கவும், மேற்படி பணியாளர்களுக்கு நகரமன்றத்தில் பெறப்பட்ட தீர்மானம் 25.10.2019 உடன் முடிவடைவதால் மேலும் தொடர்ந்து 27.10.2019 முதல் 89 நாட்களுக்கு பெற்று டெங்கு தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ளவும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆண்டு விலை விகிதத்தில் தினக்கூலி வழங்கவும், அதற்காகும் தோராய செலவினம் ரூ.60.90 இலட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிட்டுக் கொள்ளவும் மன்றத்தில் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு.</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தொடர்ந்து நீட்டித்து வைத்து நோய் தடுப்பு நடவடிக்கைகள் எடுத்தமைக்கும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண். 5220 /2016/ எச்1)

தீர்மானம் எண்:- 225 அனுமதி அளிக்கப்பட்டது

2. காஞ்சிபுரம் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் செயல்படுத்தப்படும் தினக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் திடக்கழிவுகளை தரம்பிரித்து சேகரித்தல் மற்றும் உரக்கிடங்குக்கு அனுப்புதல் பணிக்கு ஏற்கனவே உள்ள நிரந்தரப்

பணியாளர்கள் போதிய அளவு இல்லாமையால் திடக்கழிவு மேலாண்மை திட்ட விதிகளின்கீழ் முதல் நிலை குப்பை சேகரித்தல் பணிகளை தனியார் ஒப்பந்த நிறுவனங்களிடமிருந்து 350 நபர்களை பெற்று பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் K.Dis. எண். 21686 / பி3 / 2018 நாள். 14.09.1918ல் நிர்வாக அனுமதி பெறப்பட் அடிப்படையில் 20.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. அதன்படி காஞ்சிபுரம் நகரமன்ற தீர்மான எண்.27 நாள்.31.5.2019 தீர்மானத்தின் அடிப்படையில் திருவாளர் S.S. என்ஜினியர்ஸ், கோயம்பத்தூர் அவர்களுக்கு ஏற்கனவே நடைமுறையில் இருந்தபடி நகராட்சி நிதிநிலையைக் கருத்தில் கொண்டு மதிப்பிட்டபடி 220 தனியார் துப்புரவு பணியாளர்களுக்கு ந.க.எண்.3001 / 2017 / எச்1 நாள். 10.06.2019–ல் பணி உத்தரவு வழங்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக துப்புரவு ஆய்வர்களின் 24.06.2019ம் தேதிய குறிப்பின்படி நகரில் பெருகி வரும் மக்கள் தொகையினை பொருட்டு குடியிருப்புகள் அதிகமாக உள்ளதால் பொதுசுகாதாரப் பணிக் மேற்படி தனியார் ஒப்பந்த நிறுவனத்திடமிருந்து பெற்று வரும் 220 தனியார் துப்புரவு பணியாளர்களுடன் கூடுதலாக 100 பணியாளர்களை சேர்த்து மொத்தம் 320 பணியாளர்களை பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ள கேட்டுக்கொண்டதன்படி காஞ்சிபுரம் நகரமன்ற தீர்மான எண்.36 நாள்.28.06.2019 எண்ணிட்ட தீர்மானத்தில் கூடுதலாக 100 பணியாளர்களை தொடர்ச்சியாக பெற்று பணி மேற்கொள்ள திருத்திய பணி உத்தரவு 01.07.2019 ல் வழங்கப்பட்டது.

எற்கனவே 2019–2020 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் 220 தனியார் துப்புரவு பணியாளர்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ள 100 தனியார் துப்புரவு பணியாளர்களுக்கு கூடுதல் செலவினத் தொகை ரூ.1,37,70,000 / – (01.7.2919 முதல் 31.03.2020 வரை 9 மாதங்கள் ) 2019–2020 திருத்திய வரவு செலவு திட்டத்தில் சேர்க்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு.</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. 220 நபர்களுக்கு வழங்கப்பட்ட பணி உத்தரவை தொடர்ந்து கூடுதலாக 100 பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட பணி உத்தரவின்படி ஆகும் கூடுதல் செலவினத்திற்கு மன்ற அனுமதியை எதிர்நோக்கி 2019–20 திருத்திய வரவு செலவு மதிப்பீட்டில் சேர்க்கவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண்.3001 / 2017/எச்1)

தீர்மானம் எண்:- 226 அனுமதி அளிக்கப்பட்டது

3. அ) காஞ்சிபுரம் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயக்கத்தில் உள்ள லாரிகள் எண். TN21 BC 3747, TN21 BC 3290 மற்றும் TN21 AM 1663 JCB வாகனங்களுக்கு டயர்கள் பழுதானால் புதிய டயர் மற்றும் டியூப்கள் வாங்கிக் கொள்ளவும், தோராய செலவினத்திற்கு விலைப்புள்ளிகள் கோரி பெறப்பட்டதில் கூட்டுறவு நிறுவனமான ஈக்காடு வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு மையம், ஈக்காடு, திருவள்ளூர் அவர்கள் அளித்துள்ள விலை விகித அடிப்படையில் நேரடியாக மேற்படி நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யவும், கீழ்கண்ட விவரப்படி ஆகும் செலவினத்தை பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | வாகனம் விவரம் | பொருட்கள் விவரம் | ஒன்றின் விலை ரூ. | தேவைப்படும் எண்ணிக்கை | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | TN 21BC 3727 காம்பேக்டர் | புதிய MRF டயர் மற்றும் டியூப், – (அளவு 8.25 x 20 ) | 15,850 | முன் பக்கம் – 2 | 37,700 |
| | | புதிய MRF டயர் மற்றும் டியூப், – (அளவு 8.25 x 20 ) | 17,900 | பின் பக்கம் – 4 | 71,600 |
| 2 | TN 21BC 3290 காம்பேக்டர் | புதிய MRF டயர் மற்றும் டியூப், – (அளவு 8.25 x 20 ) | 15,850 | முன் பக்கம் – 2 | 37,700 |
| | | புதிய MRF டயர் மற்றும் டியூப், – (அளவு 8.25 x 20 ) | 17,900 | பின் பக்கம் – 4 | 71,600 |
| 3 | TN 21AM 1663 J C B | புதிய MRF டயர் மற்றும் டியூப், – (அளவு 9.00 x 16 ) | 15,850 | முன் பக்கம் – 2 | 37,700 |
| | | புதிய MRF ஆசுகு டயர் மற்றும் டியூப், – (அளவு 16 x 9 x 28) | 42,700 | பின் பக்கம் – 2 | 85,400 |
| | | | | மொத்தம் ரூ. | 3,41,700 |

**ஆ)**காஞ்சிபுரம் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயக்கத்தில் உள்ள காம்பேக்டர் லாரி எண்.TN21 BC 3749– க்கு டயர்கள் பழுதானால் புதிய டயர் மற்றும் டியூப்கள் வாங்கிக் கொள்ளவும், தோராய செலவினத்திற்கு விலைப்புள்ளிகள் கோரி பெறப்பட்டதில் கூட்டுறவு நிறுவனமான ஈக்காடு வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு மையம், ஈக்காடு, திருவள்ளூர் அவர்கள் அளித்துள்ள விலை விகித அடிப்படையில் நேரடியாக மேற்படி நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யவும், கீழ்கண்ட விவரப்படி ஆகும் செலவினத்தை பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **1)** MRF டயர் மற்றும் டியூப் ( **8.25 x 20** ) – முன்பக்கம் **1**–க்கு ரூ.**15,850** | – **2** எண்கள் | ரூ. **31,700** |
| **2)** MRF டயர் மற்றும் டியூப் ( **8.25 x 20** ) – பின்பக்கம் **1**–க்கு ரூ.**17,900** | – **4** எண்கள் | ரூ. **35,800** |
| | மொத்தம் | ரூ. **67,500** |

**அலுவலகக் குறிப்பு.**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி செலவினத்திற்கும் பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண். **10249 /2019** / எச்**1)**

தீர்மானம் எண்:- **227** அனுமதி அளிக்கப்பட்டது

**4.** காஞ்சிபுரம் பெருநகராட்சியில் இயங்கிவரும் 1) அரசு தலைமை மருத்துவமனை 2) விளக்கடி கோயில் தெரு ஆகிய இரண்டு அம்மா உணவகத்திற்கு ஏழை, எளிய மக்கள் சாப்பிட மலிவு விலையில் உணவு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதை விற்பனை செய்வதற்கு இட்லி, சாம்பார் சாதம், தயிர் சாதம் என தேவையான அளவிற்கு டோக்கன்களை கூட்டுறவு அச்சகங்கள் மூலமாக அச்சிட்டு பெற்றுக் கொள்ளவும், அதற்கான தோராய செலவனம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு.**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. அவசிய அவசரம் கருதி மன்றம் அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண்:- **228** அனுமதி அளிக்கப்பட்டது

**5.** காஞ்சிபுரம் பெருநகராட்சியில் பணிபுரியும் ஓட்டுநர்கள், துப்புரவு மேற்பார்வையாளர்கள். துப்புரவு பணியாளர்கள், அனைத்து பிரிவு கடைநிலை ஊழியர்கள், குடிநீர் வழங்கல் துறை பணியாளர்கள் அனைவருக்கும் ஆண்டுதோறும் சீருடைகள் வழங்கப்பட்டு அதற்கான தையற்கூலியும் சேர்த்து வழங்கப்பட்டு வரப்படுகிறது. அதன்படி 2019-20-ம் ஆண்டுக்கான சீருடைகள் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள். கூட்டுறவு துறை நிறுவனங்களிடமிருந்து உரிய விகிதம் பெற்று வாங்கி வழங்கவும், அதற்கான தையற்கூலி வழங்கவும். அதற்காகும் தோராய செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் உரிய செலவினத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு.**

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (ந.க.எண். **9815/2019** / எச்**1)**

தீர்மானம் எண்:- **229** அனுமதி அளிக்கப்பட்டது

**6.** காஞ்சிபுரம் நகரம் சர்வே வார்டு எண் 3 பிளாக் எண் 6 நகரளவு எண் 264/ 2எ3பி / 264 /2 மற்றும் 2எ 4பி /2எ /264/2 ல் தற்போது இயங்கி வரும் பாபு, பாபு மினி, பாரடைஸ் திரையரங்களுக்கு இடையில் உள்ள 7110 சதுர அடி அளவிலான காலி இடத்தில் புதியதாக இரண்டு மினி திரையரங்குகள் அமைக்க அனுமதி கோரி திரையரங்க உரிமையாளர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு விண்ணப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சித்

தலைவர் காஞ்சிபுரம் அவர்களின் கடித ந.க.எண் 19709/2019/எம்1 நநள் 25.04.2019 ம் தேதிய கடிதத்தில் இரண்டு மினி திரையரங்குகள் அமைக்க 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்க ஒழுங்குமுறை சட்ட விதி 35(2) ன் படி தடையின்மை சான்று வழங்க நகரமன்ற தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிட கோரி கடிதம் அனுப்பியுள்ளார்.

அதன் அடிப்படையில் சர்வே வார்டு எண் 3 பிளாக் எண் 6 நகரளவு எண் 264/ 2எ3பி / 264 /2 மற்றும் 2எ 4பி /2எ /264/2 ல் தற்போது இயங்கி வரும் பாபு, பாபு மினி, பாரடைஸ் திரையரங்களுக்கு இடையில் உள்ள 7110 சதுர அடி அளவிலான காலி இடத்தில் புதியதாக இரண்டு மினி திரையரங்குகள் அமைக்க 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்க ஒழுங்குமுறை சட்ட விதி 35(2) ன் படி தடையின்மை சான்று வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. மேலும் புதிய திரையரங்க கட்டிடத்திற்கு நகர் ஊரமைப்பு சட்ட விதிகளின்படி கட்டிட அனுமதி தனியாக விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதை குறிப்பிட்டு அனுமதி வழங்கலாம்.
அலுவலகக் குறிப்பு.

மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.4721/2019/எப்2)

தீர்மானம் எண்:- **230** அனுமதி அளிக்கப்பட்டது

**7.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமையும் அனுமதி பெறாத மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்த அரசாணை நிலை எண்.**78** தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் **04.05.2017,** மற்றும் அரசாணை(நிலை) எண்.**172,** தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள் **13.10.2017** ன் அடிப்படையில் இந்நகராட்சி பகுதியில் உள்ள அனுமதி பெறாத மனைப்பிரிவுகளுக்கு கொள்கையளவிலான ஒப்புதல் வழங்க கோரி நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது

அதன் அடிப்படையில் தேனம்பாக்கம்; கிராமம் சர்வே எண்கள். 6/1A, 6/1B, 7/1,2, 8/1A,1B, 8/2A,2B ல் **1.51** ஏக்கர் (அ) **6110.77** சதுர மீட்டர் பரப்பளவு உள்ள அலமேலு நகர் அனுமதி பெறாத மனைப்பிரிவிற்கு உறுப்பினர் செயலர் காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் ந.க.எண்.**725/2018/** கா.உ.தி.கு நாள்,**24.09.2018** ல் மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தி வரைப்பட அனுமதி எண் ம.வ./கா.உ.தி.கு எண்.160**(R)/2019** என எண்ணிடப்பட்டு குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது
மனைப்பிரிவு வரைப்படத்தின்படி மொத்த மனைகள் **42**

விற்கப்பட்ட மனைகள் **2**

விற்கப்படாத மனைகள் **40**

அவற்றில் பூங்கா இடம் ஒதுக்கப்பட்டுள்ளதன் மொத்தப்பரப்பளவு **4669** சதுர அடி ( விற்கப்படாத மொத்த மனைப்பரப்பு **41407** சது,அடியில் **10.13** சதவீகிதம் ) ஒதுக்கிடப்பட்டுள் ளதன் நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்க வேண்டிய சாலை சாலை மற்றும் பூங்கா இடம் நகராட்சிக்கு தானமாக ஒப்படை செய்து தான பத்திரம் ஆவண எண் **2647 /2019** நாள்**19.06.2019** ல் தானப்பத்திரம் பதிவு செய்து நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது

மனைப்பிரிவு உரிமையாளரால் ஒப்படை செய்யப்பட்டுள்ள தான பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா இடத்தினை நகராட்சி பராமரிப்பில் ஏற்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது. மேலும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள கட்டணங்கள் நில உரிமைதாரரால் நகராட்சிக்கு செலுத்திய பின்பு ஒவ்வொரு தனிமனைக்கும் ஒப்புதல் வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம் (ந.க.எண்**11063/2019/**எப்**1)**

தீர்மானம் எண்:- **231** அனுமதி அளிக்கப்பட்டது

**8.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமையும் அனுமதி பெறாத மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்த அரசாணை நிலை எண்.78 தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்.04.05.2017, மற்றும் அரசாணை (நிலை) எண்.172, தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள்.13.10.2017 ன் அடிப்படையில் இந்நகராட்சி பகுதியில் உள்ள அனுமதி பெறாத மனைப்பிரிவுகளுக்கு கொள்கையளவிலான ஒப்புதல் வழங்க கோரி நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது

அதன் அடிப்படையில் தேனம்பாக்கம்; கிராமம் சர்வே எண்கள்.211/2**B** ல் 1.20 ஏக்கர் (அ) 4856.24 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள நாகம்மாள் நகர் விரிவு **II** அனுமதி பெறாத மனைப்பிரிவிற்கு உறுப்பினர் செயலர் காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் ந.க.எண்.710/2018/கா.உ.தி.கு, நாள்.27.08.2018 ல் மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தி வரைப்பட அனுமதி எண் ம.வ./கா.உ.தி.கு எண்.153(**R**)/2019 என எண்ணிடப்பட்டு குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மனைப்பிரிவு வரைப்படத்தின் படி மொத்த மனைகள் 35

விற்கப்பட்ட மனைகள் 3

விற்கப்படாத மனைகள் 32

அவற்றில் மனை எண்கள் 12,13,14,15,16 என இரண்டு பூங்கா இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதன் மொத்தப்பரப்பளவு 4054 சதுர அடி (விற்கப்படாத மொத்த மனைப்பரப்பு 35889 சது,அடியில் 10.14 சதவீகிதம்) ஒதுக்கிடப்பட்டுள்ளது. நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்க வேண்டிய சாலை மற்றும் இரண்டு பூங்கா இடம் (பூங்கா இடம் 1 - 1091 சதுர.அடி பூங்கா இடம் 2 - 2963 சதுர.அடி ஆக மொத்தப் பரப்பளவு 4054 சதுர அடி நகராட்சிக்கு தானமாக ஒப்படை செய்து தான பத்திரம் ஆவண எண்.2648/2019, நாள்.19.06.2019ல் தானப்பத்திரம் பதிவு செய்து நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது,

மனைப்பிரிவு உரிமையாளரால் ஒப்படை செய்யப்பட்டுள்ள தான பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா இடத்தினை நகராட்சி பராமரிப்பில் ஏற்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது. மேலும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள கட்டணங்கள் நில உரிமைதாரரால் நகராட்சிக்கு செலுத்திய பின்பு ஒவ்வொரு தனிமனைக்கும் ஒப்புதல் வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம் (ந.க.எண்.10050/2019/எப்1)

தீர்மானம் எண்:- **232** அனுமதி அளிக்கப்பட்டது

**9.** காஞ்சிபுரம் நகரம், ஓரிக்கை கிராமம், சர்வே எண்.**212/1**பி-ல் பரப்பளவு **0.51** ஏக்கர் நிலத்தை குடியிருப்பு மனைப்பிரிவு செய்ய அனுமதி கோரி மனுதாரர் **1)** திருமதி.வி. குசாலா, **2)** திரு.வி. ஞானவேல், **3)** திரு.வி. சுதாகர் என்பவர் உறுப்பினர் செயலர் (பொ) அவர்களுக்கு விண்ணபிக்கப்பட்டதன் அடிப்படையில் உறுப்பினர் செயலர் அவர்களின் கடிதம் ந.க.எண்.**513/2019/**கா.உதிகு, நாள்.**12.06.2019–**ல் தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட சாலை வடிவமைப்பு வரைப்படம் நகராட்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டு வரைப்படத்தில் கண்டுள்ளபடி தார் சாலை, பாலங்கள், சாக்கடை வடிகால், தெருவிளக்கு ஆகியவற்றை ஆணையரின் கருத்திற்கேற்ப மனுதாரரால் அமைத்து நகர் மன்ற தீர்மான ஒப்புகையுடன் உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்டு இதன் நகல் அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. வரைபடத்தில் கண்டுள்ளபடி தார் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் குடிநீர் பகிர்மானக் குழாய்கள் பதிப்பதற்கான மதிப்பீடு ரூ.**33,000/–** மற்றும் தெருவிளக்குகள் அமைப்பதற்கான மதிப்பீடு ரூ.**51,000/–**ஆக மொத்தம் ரூ.**84,000/– (**இரசீது எண்.**008/01/2/19–20/0003329,** நாள்.**01.08.2019)** மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளதாகவும், இச்சாலைகளை தானமாக பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கலாம் என பொறியியல் பிரிவில் **05.08.2019–**ல் குறிப்பு அளிக்கப்பட்டுள்ளது. எனவே தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்பட்ட சாலை வடிவமைப்பு வரைப்படத்தில் **(Road Pattern)** கண்டுள்ள சாலை மற்றும் மூலை முடுக்குகளை மனுதாரரிடமிருந்து தானமாக பெறவும், பின் உறுப்பினர் செயலர் அவர்களால் மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கவும் மன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

உறுப்பினர் செயலர் அவர்களின் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள சாலைகளை மனுதாரரிடமிருந்து நகராட்சி தானமாக பெறவும், பின் மனைப்பிரிவு தொழில்நுட்ப ஒப்புதல் உறுப்பினர் செயலர் அவர்களால் அளித்த பின்னர் இறுதி ஒப்புதல் அம்மனைப்பிரிவிக்கு வழங்கவும் மன்றம் ஒப்புதல் செய்யலாம்.

**(**ந.க.எண்.**6313/2019/**எப்**2)**

தீர்மானம் எண்:- **233** அனுமதி அளிக்கப்பட்டது

**10.** மாண்புமிகு முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்வு திட்டத்தின் படி காஞ்சிபுரம் மாவட்டத்தில் **26.08.2019** முதல் **31.08.2019** முடிய (**6** நாட்கள்) பொது மக்களிடமிருந்து நியமிக்கப்பட்ட அலுவலர் குழுக்கள் வாயிலாக மனுக்கள் பெறப்பட்டது. மேற்படி திட்டம் தொடர்பாக பெறப்பட்ட மனுக்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் **20.08.2019 -**

ம் தேதிய ந.க.எண்.**2251/2019/**எக்ஸ்**3** கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தினை பொதுமக்கள் அறியும் படி நகரின் அனைத்துப்பகுதிகளிலும் ஆட்டோ மூலம் விளம்பரம் செய்யவும் பொது மக்கள் கூடும் இடங்களில் விளம்பர பலகைகள் அமைக்கவும் பிட் நோட்டீஸ்கள் அடித்து விநியோகம் செய்யவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி அவசர அவசியம் கருதி பணிகளை செய்யப்பட்டதற்கு ஆகும் தோராய செலவுத் தொகை ரூ.**1,24,000/-**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.**259/2019/**எப்**2)**

தீர்மானம் எண்:- **234** அனுமதி அளிக்கப்பட்டது

11.அ) காஞ்சிபுரம் பெருநகராட்சி தேவராஜ சுவாமி திருக்கோயில் அத்திவரதர் வைபவம் 01.07.2019 முதல் 17.08.2019 வரை நடைபெறுவதை முன்னிட்டு மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் அறிவுறுத்தளின்படி ஓரிக்கை பிரதான சாலையில் பொது மக்களுக்கு போக்கு வரத்துக்கும் இடையூராக உள்ள மின்கம்பத்தை அகற்றும் பொருட்டு உரிய கள ஆய்வு செய்து மாற்றியமைத்தற்காக மின் வாரியத்திலிருந்து 8870/-க்கு கேட்பு வழங்கப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ஆ) காஞ்சிபுரம் நகராட்சி வார்டு எண்.32-ல் அமைந்துள்ள வளத்தீஸ்வரர் கோயில் தெருவில் கதவு எண்.45/8 அருகில் உள்ள மின் கம்பம் பொதுமக்களுக்கு போக்குவரத்திற்கு இடையூராக உள்ளதாகவும், அதனை மாற்றி அமைக்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. மேற்படி மின்கம்பத்தினை மாற்றி அமைப்பதற்காக தமிழ்நாடு மின்சார வாரியத்தால் ரூ.16,799/- செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டது. அதன்படி மேற்படி மின்கம்பத்தை மாற்றி அமைப்பதற்கான கட்டணம் ரூ.16,799/-ஐ தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று தொகை செலுத்தியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.6896/19/இ3)

தீர்மானம் எண்:- **235** அனுமதி அளிக்கப்பட்டது

**12.** காஞ்சிபுரம் நகராட்சியின் பொறியியல் பிரிவில் பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனத்தின் பழுதுகள் பார்த்து தரும் பணிக்கு **21.10.2019** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர்கள் | உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. | விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் பெயர் (திருவாளர்கள்) | விலைப்புள்ளி தொகை (ரூபாய்) | குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | நகராட்சியின் ஈப்பு வாகனம் எண்.**TN 21 AL 5848**க்கு பழுதுகள் பார்த்தல் | 50,000/- | M/s A.R.V. Body Builders, Chennai-56 | 49324/- | குறைவு |
| | | | M/s Senthil Murugan Works, Chennai-56 | 49678/- | அதிகம் |

மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண்:- 236 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

13. காஞ்சிபுரம் பெருநகராட்சியில் பொது நிதியின்கீழ் கீழ்க்காணும் பணியினை மேற்கொள்ள 30.10.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், கீழ்க்கண்ட விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. (லட்சத்தில்) | ஒப்பந்த்தாரர்கள் பெயர் திரு/திருமதி/M/s | ஒப்பந்த சதவீதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | கூடுதல் | குறைவு |
| 1 | வார்டு எண் 32, விளக்கடி கோயில் வடக்கு பகுதியில் மழைநீர் வடிகால் வசதி அமைத்தல். | 9.20 | N.R. முகுந்தபாபு | - | 0.11% |
| | | | N.R.M. ராகவன் | 1.77% | - |
| 2 | வார்டு எண் 32, விளக்கடி கோயில் தெற்க்கு பகுதியில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் வசதி அமைத்தல். | 9.90 | N.R. முகுந்தபாபு | - | 0.09% |
| | | | N.R.M. ராகவன் | 1.19% | - |
| 3 | 24-வது வார்டு தும்பவனம் புதுத் தெரு முதல் விஜயகிராமணி தெரு வரை உள்ள மழைநீர் செல்லும் கால்வாயில் உள்ள மண் மற்றும் கசடுகளை அப்புறப்படுத்துதல் மற்றும் சிமெண்ட் சிலாப் கொண்டு மூடுதல் பணி. | 4.00 | B. ரவி | - | 0.07% |
| | | | P.விஜயரகுநாதன் | 0.50% | - |
| 4 | 37, 44-வது வார்டு சேஷாத்திரி பாளையம் பழனி தெரு முதல் 36-வது வார்டு அரசமரம் தெரு நாகலூத்து கால்வாய் வரை, 25-வது வார்டு ஜன்டா தெரு முதல் புதுத் தெரு இணைப்பு சாலை வரை உள்ள மழைநீர் செல்லும் கால்வாய்களில் உள்ள மண் மற்றும் கசடுகளை அப்புறப்படுத்துதல் மற்றும் சிமெண்ட் சிலாப் கொண்டு மூடுதல் பணி. | 5.00 | B. ரவி | - | 0.08% |
| | | | V.B.அசோசியேட்ஸ் | 0.48% | - |

அலுவலக குறிப்பு :-

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.39/2019/இ1)

தீர்மானம் எண்:- 237 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

14. நாடாளுமன்ற தேர்தல் 2019-ஐ முன்னிட்டு காஞ்சிபுரம் (தனி) தொகுதிக்கான நாடாளுமன்ற தேர்தல் 18.04.2019 அன்று நடைபெற உள்ள நிலையில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுலில் உள்ளதால்,இத்தேர்தல் பணிக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள வாக்கு சாவடி மையங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. எனவே தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி, தேர்தல் பணிக்கான வாக்கு சாவடி மையங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளும் பணிக்கு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட கீழ்குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு வழங்கப்பட்ட செலவின விவரங்கள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | செலவுத் தொகை ரூ. | செலவுச் சீட்டு எண் | நாள் |
|---|---|---|---|---|
| | வாக்குசாவடி மையங்களாக தேர்வு செய்யப்பட்ட பஞ்சாயத்து யூனியன் பள்ளி, AKT பள்ளி, ஏகாம்பரநாதர் மேற்கு மாட வீதி, DR பள்ளி மரிய அக்சீலியம், வைகுந்த பெருமாள் பள்ளி, சத்துணவு மையம், விவேகானந்தா பள்ளி, தேரடி பள்ளி சத்துணவு மையம் ஆகியவற்றில் அடிப்படை வசதிகளான மின், கழிப்பிடம், தண்ணீர், மின் விளக்கு, மின் விசிறிகள், சாய்தளம் மற்றும் மரப்பந்தல் வசதிகள் ஏற்படுத்தும் பணி. | 7,77,374 | 008 | 17.10.2019 |
| | வாக்குச்சாவடி மையங்களாக தேர்வு செய்யப்பட்ட வெங்கடாபுரம் தொடக்கப்பள்ளி, ஒலிமுகமதுபேட்டை நடுநிலைப்பள்ளி மற்றும் TNHB Qtrs. மேல்நிலைப் பள்ளிகளில் தேர்தல் வாக்குச்சாவடி மையங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான மின், கழிப்பிடம், தண்ணீர், மின் விளக்கு, மின் விசிறிகள், சாய்தளம் மற்றும் மரப்பந்தல் வசதிகள் | 8,05,000 | 009 | 17.10.2019 |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஏற்படுத்தும் பணி. | | | |
| | வாக்குச்சாவடி மையங்களாக தேர்வு செய்யப்பட்ட PTVS பள்ளி, CSM பள்ளி, சுப்பையா முதலியார் பள்ளி, முத்து செட்டியார் பள்ளி, நாராயணகுரு பள்ளி, பச்சையப்பன் பள்ளி, கிருஷ்ணா பள்ளி, விளக்கடி கோயில் தெரு அங்கன்வாடி மையம், பச்சையப்பன் பெண்கள் கல்லூரி, ஆண்டர்சன் பள்ளிகளில் அடிப்படை வசதிகளான மின், கழிப்பிடம், தண்ணீர், மின் விளக்கு, மின் விசிறிகள், சாய்தளம் மற்றும் மரப்பந்தல் வசதிகள் ஏற்படுத்தும் பணி | 9,90,000 | 11 | 18.10.2019 |
| | வாக்குச்சாவடி மையங்களாக தேர்வு செய்யப்பட்ட காமாட்சியம்மன் காலனி பள்ளி, தேனம்பாக்கம் பள்ளி, சின்னையன்குளம் பள்ளி, நத்தப்பேட்டை பள்ளி, தாயார்குளம் அங்கன்வாடி மையம், ஆதிதிராவிடர் பள்ளி, BMS பள்ளிகளில் அடிப்படை வசதிகளான மின், கழிப்பிடம், தண்ணீர், மின் விளக்கு, மின் விசிறிகள், சாய்தளம் மற்றும் மரப்பந்தல் வசதிகள் எற்படுத்தும் பணி. | 7,60,000 | 12 | 18.10.2019 |
| | வாக்குச்சாவடி மையங்களாக தேர்வு செய்யப்பட்ட ஸ்ரீநிவாசா மேல்நிலைப்பள்ளி, கால்நடை மருத்துவமனை, திருக்காலிமேடு துவக்கப்பள்ளி, T.K. நம்பி உயர்நிலைப் பள்ளி, BMS அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, வடக்க மாடவீதி துவக்கப்பள்ளி, நத்தப்பேட்டை மேல்நிலைப் பள்ளி, பச்சையப்பன் ஆண்கள் கல்லூரி, பட்டாளம் துவக்கப்பள்ளி, கிருஷ்ணா நிதி நாடும் நடுநிலைப்பள்ளி, காந்தி ரோடு துவக்கப்பள்ளி, யதோத்தகாரி துவக்கப்பள்ளி, ரெட்டிப்பேட்டை துவக்கப்பள்ளி, இராணி அண்ணாதுரை மேல்நிலைப்பள்ளி, பச்சையப்பன் நடுநிலைப்பள்ளி, ஆற்காடு நாராயணசாமி பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் பச்சையப்பன் பெண்கள் கல்லூரி ஆகியவற்றில் அடிப்படை வசதிகளான மின், கழிப்பிடம், தண்ணீர், மின் விளக்கு, மின் விசிறிகள், சாய்தளம் மற்றும் மரப்பந்தல் வசதிகள் ஏற்படுத்தும் பணி. | 5,56,795 | 13 | 18.10.2019 |

அலுவலகக் குறிப்பு :-

மன்றம் பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண்:- **231** அனுமதி அளிக்கப்பட்டது

**15.** காஞ்சிபுரம் நகராட்சிக்குட்பட்ட **51** வார்டுகளிலும் உள்ள கட்டிடங்களில் மழைநீர் சேகரம் அமைப்பு ஏற்படுத்திடும் விதமாக பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்திடவும்**,** கட்டிட உரிமையாளர்களிடம் அது குறித்த விவரங்களை தெரிவித்திடும் பொருட்டு கீழ்கண்ட விவரப்படி Multi Colour Stickers, Hand bills / Notice – Single Colur அச்சடித்து வழங்கிட **16.10.2019** அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| S. No | Description | Price in Rs. | | |
|---|---|---|---|---|
| | | M/s Sri Krishna Agencies | M/s Venus Associates | M/s Sunshine International Agritech |
| 1 | **Sticker** in Multi Colour A4 Size 10” x 10” Printed in 100 GSM and deliver at Municipal Office for 1 No including of Tax. | 11.80 | 13.50 | 13.95 |
| 2 | **Hand Bills** in Multi Colour A4 Size 10” x 10” Printed in 100 GSM and deliver at Municipal Office for 1 No including of Tax. | 9.80 | 7.00 | 5.65 |
| 3 | **Hand Bills / Notice** in Single Colour A4 Size Printed in 80 GSM and deliver at Municipal Office for 1 No including of Tax | 2.40 | 3.50 | 3.75 |

அலுவலக குறிப்பு :-

1. மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள **M/s Sri Krishna Agencies** நிறுவனத்தின் விலைப்புள்ளிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**2.** பணியின் அவசர அவசியம் கருதி நகர மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.**7989/2019**/எப்**1**)

தீர்மானம் எண்:- **239** அனுமதி அளிக்கப்பட்டது**.**

**16.** காஞ்சிபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கீழ்காணும் விவரப்படி அத்தியாவசிய பணிகளை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம் | உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | 37 மற்றும் 44-வது வார்டு சேஷாதிரி பாளையம் பழனி தெரு முதல் 36-வது வார்டு அரசமரம் தெருவில் உள்ள நாகலுத்து கால்வாய் மற்றும் 25-வது வார்டு ஹைதர்பட்டரை ஜன்டா தெரு முதல் புதுத்தெரு இணைப்பு சாலை வரை மழை நீர் வடிகால்வாய் முழுவதும் மண் மற்றும் கசடுகளை அள்ளி அப்புறப்படுத்தி சீர் செய்து புதிய கவர் சிலாபுகள் அமைத்தல் பணிகள் மேற்கொள்ளுதல். | 5,00,000/- |
| 2 | **50–**வது வார்டு செவிலிமேடு, **51–**வது வார்டு ராஜீவ்காந்தி நகர் மற்றும் **45–**வது வார்டு திருப்பருத்திக்குன்றம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள நவீன கழிப்பிடங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கேன சாய்வு தளம் அமைத்தல், தண்ணீர் வசதி மற்றும் மின்விளக்குகள் பழுது பார்த்தல் பணிகள் மேற்கொள்ளுதல். | 1,30,000/- |
| 3 | 35-வது வார்டு மற்றும் 36-வது வார்டு மஞ்சள் நீர் துணைக் கால்வாயில் உள்ள சேறு சகதிகளை தூர்வாரி கால்வாயினை ஆழப்படுத்துதல் பணிகள் மேற்கொள்ளுதல். | 8,00,000/- |

மேற்படி பணிகளை மேற்கொள்ளவும், அதற்கான மதிப்பீட்டுத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

தீர்மானம் எண்:- 240 அனுமதி அளிக்கப்பட்டது

17. இந்நகராட்சி புதை வடிகால் திட்டத்தில் இரண்டு H.T. பம்பிங் ஸ்டேசன், இரண்டு L.T. பம்பிங் ஸ்டேசன், ஆறு லிப்டிங் ஸ்டேசன் என பத்து கழிவு நீரேற்று நிலையங்களில் உள்ள கிணறுகளில், பைப்லையனில் இருந்து வரும் மணல் கசடுகள் சேர்வதை ஒராண்டிற்கு அவ்வபோது அள்ளி வெளியேற்றும் பணிகள் ரூ.9.00 இலட்சத்தில் செய்திட 29.10.2019-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று உள்ளது. இவைகள் மன்றத்தின் பார்வைக்கும் மடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **நிறுவனத்தின் பெயர்** | **தொகை ரூ.** |
|---|---|---|
| 1 | மெசர்ஸ் V.B. ஆசோசியேட்ஸ்,<br>நெ.12, **I st** பிரதான சாலை, நங்கநல்லூர், சென்னை-**61** | ரூ.8,97,750/-<br>மதிப்பீட்டிற்கு சமம் |
| 2 | மெசர்ஸ் இரவி,<br>ஒப்பந்ததாரர்**, 39,** திருமலை நகர்**,** அம்மங்கார தெரு**,** காஞ்சிபுரம் | ரூ.10,07,000/-<br>12.17 சதவீதம் மதிப்பீட்டைவிட கூடுதல் |

அலுவலகக் குறிப்பு :-

1. வரப்பெற்று உள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மெசர்ஸ் V.B. அசோசியேட்ஸ், சென்னை-61 நிறுவனத்தினர் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்று அனுமதிக்கலாம்.

2. பணியின் அத்தியாவசியம் கருதி நகரமன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

தீர்மானம் எண்:- 241 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

18. இந்நகராட்சி பாலாறு ஓரிக்கை குடிநீர் திட்டம் மற்றும் திருப்பாற்கடல் குடிநீர் திட்டம் (வேகவதி நீர் உந்து நிலையம்) மூலம் விநியோகிகப்படும் குடிநீர் சுத்திகரிப்பு செய்திட Sodium Hypo Chloride பயன்படுத்தப்பட்டு வருகின்றது. நவம்பர் மாதம் 15.11.2019 முதல் 15.04.2020 வரையிலான காலத்திற்கு ரூ.9.90 இலட்சத்தில் லிக்விட்

குளோரின் விநியோகம் செய்திட மற்றும் இதன் மோட்டார், பம்பு இணைப்புகள் பராமரிப்பு 29.10.2019-ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ் கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று உள்ளது. இவைகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | மெசர்ஸ் ராஜ கணபதி இஞ்சினியரிங் ஒர்க்ஸ்,<br>47, 5-வது தெரு, சரஸ்வதி நகர், ஆவடி, சென்னை-54 | ரூ.14.00 / லிட்டர் |
| 2 | மெசர்ஸ். ஸ்ரீ சபரி இஞ்சினியரிங்,<br>**17. A.G.D.** இரண்டாவது தெரு, ஆவடி, சென்னை-54 | |

அலுவலகக் குறிப்பு :-

1. வரப்பெற்று உள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் ஸ்ரீ ராஜகணபதி இஞ்சினியரிங், ஒர்க்ஸ் , சென்னை -54 ஏற்று அனுமதிக்கலாம்.
2. பணியினை அத்தியாவசியம் கருதி நகரமன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்கயிளன் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.9788/இ3/2019)

தீர்மானம் எண்:- 242 அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

**19.** காஞ்சிபுரம் நகராட்சிக்கு சொந்தமான கிழக்கு பகுதி கழிவு நிரேற்று நிலையம் தேனம்பாக்கத்தில் அமைந்து உள்ளது. **18** வார்டுகளில் இருந்து வரப்பெறும் கழிவு நீர் இக்கழிவு நீரேற்று நிலையங்களில் இருந்து நீரேற்றம் செய்து கழிவு நீர் சுத்தகரிப்பு நிலையம் அனுப்பப்படுகின்றது. இக் கழிவு நீரேற்று நிலையம் உயர்மின் அழுத்த இணைப்பு (H.T. Supply) உடையது ஆகும். இங்கு உள்ள மின் இணைப்பில் ஆறு தூண்கள் அமைப்பு இரண்டு டிரான்ஸ்பார்மர் இனைந்த மின் சாதனங்கள் பொருத்தப்பட்டு உள்ளது. இதில் இன்சுலேட்டர்கள், லைட்னிங் அரெஸ்டர், கம்பங்கள் பழுது ஆகி உள்ளது. ஐந்து ஆண்டுகளுக்கு மேல் ஆனநிலையில் அவசியம் பராமரிப்பு பணிகள் செய்யவேண்டும் . மேலும் கட்டுப்பட்டு அறையில் புதிய Sensitive control board 75 M.P. Motor-க்கு பொருத்த வேண்டும். இதற்கான உத்தேச செலவினம் ரூ.**4.80** இலட்சம் ஆகம். பணிகள் மேற்கொள்ளவும் இதற்காகும் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :-

**1.** மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**2.** பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

தீர்மானம் எண்:- **243** அனுமதி அளிக்கப்பட்டது

**20.** காஞ்சிபுரம் பெருநகராட்சி திருப்பாற்கடல் தலைமை நீர் பணியிடத்தில் உள்ள **75 H.P.** டர்பைன் பம்பில் அதிக அதிர்வு மற்றும் இரைச்சல் ஏற்பட்டு இயக்க இயலாத நிலை எற்பட்டுள்ளது. இதில் கடந்த எழு வருடமாக எவ்வித பழுது நீக்கமும் செய்யப்படவில்லை. **20** மீட்டர் ஆழத்தில் உள்ள டர்பைன் பம்பை மேலே எடுத்து இதன் புஸ்கள் பேரிங்குகள் மாற்ற **20** மீட்டர் லையன் ஷாட்டுகள் ரீ அலைன்மென்ட் செய்ய வேண்டும் ஸ்பைட., ரிங், ரப்பர்புஸ், **250 mm** டபுள் பிளாஞ் பைப் **12** எண்கள் போல்ட், நட் வாசர்கள் மாற்றி பணிகள் செய்து பொருத்தி இயக்க வேண்டும்.

இதன் உத்தேச செலவினம் ரூ.**3.75** இலட்சம் ஆகும். தினசரி நீரளிப்பு பணிகள் செய்திட மேற்படி டர்பைன் பம்பின் பழுது நீக்கம் செய்திடவும் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு :-

1. குடிநீர் பணி அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. நகர் மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**(**ந.க.எண்.**633/**இ**3/2019/3)**

தீர்மானம் எண்:- **244** அனுமதி அளிக்கப்பட்டது

**21.** காஞ்சிபுரம் பெருநகராட்சியில் பொறியியல் பிரிவில் பராமரிப்பில் இயங்கிவரும் கழிவுநீர் உறிஞ்சும் வாகனம் பதிவு எண். TN21 G0146-ன் தகுதிச் சான்று புதுப்பிக்க வேண்டியுள்ளதால் இவ்வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் தகுதிச் சான்று (FC) புதுப்பிக்க பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவின ரூ.**4,55,000/-**க்கு எழுத்தால் (ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பத்தைந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு :-

மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.**10134/**இ**2/2019)**

தீர்மானம் எண்:- **245** அனுமதி அளிக்கப்பட்டது

**22.** இந்நகராட்சி பதிவு பெற்ற கீழ்கண்ட ஒப்பந்ததாரர்கள் இந் நகராட்சியில் பணி செய்த வகையில் ஒப்பந்தப்புள்ளியோடு செலுத்திய டேவணித் தொகை மற்றும் பட்டியலில் பிடித்தம் செய்த 5% காப்புத் தொகையினை திரும்ப வழங்குமாறு மனு செய்துள்ளார்கள். மேற்படி தொகைகள் காலம் கடந்த வைப்பு நிதியில் சேர்ந்துள்ளதால், மனுதாரர்களால் செலுத்தப்பட்ட டேவணித் தொகை மற்றும் 5% காப்புத் தொகையினை சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு கீழ்குறிப்பிட்டுள்ளவாறு வழங்கிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | முன் வைப்புத் தொகை (EMD) ரூ. | காப்புத் தொகை (Retension) ரூ. |
|---|---|---|---|---|
| 1 | அங்கன்வாடி மையங்கள் பழுது – 15 மையங்களில் பெரிய அளவிலான பழுதுகள் பார்ப்பது. | K. சீனிவாசன் | - | 68,491/- |
| 2 | IUDM 2012-13 திட்டத்தின் கீழ் உரக்கிடங்கிற்கு மின்சார வசதி செய்தல் பணி. | K.S. மணி எலக்ட்ரிகல்ஸ் | 50,000/- | - |

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.8894/இ1/2019)

தீர்மானம் எண்:- 246 அனுமதி அளிக்கப்பட்டது

23. காஞ்சிபுரம் பெருநகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் தமிழ்நாடு நீடித்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் துப்புரவு பணியாளர்கள் மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர்களுக்கு 13.09.2019 முதல் 14.09.2019, 16.09.2019 முதல் 17.09.2019 மற்றும் 18.09.2019 முதல் 19.09.2019 வரை ஆகிய தேதிகளில் மூன்று பிரிவுகளாக பயிற்சி வகுப்புகள் நடத்த நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது 31.08.2019-ம் தேதிய ந.க.எண்.27547/2017/உ.ச. எண்ணிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி நாட்களில் பயிற்சி நடத்த ஆகும் செலவினத்திற்கு நிதி ரூ.175000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டவாறு திரு.மு.அ. முகமது இக்பால், துப்புரவு ஆய்வாளர்/பயிற்சி ஒருங்கிணைப்பாளர் அவர்களால் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு மேற்படி செலவினத்திற்கு செலவு பட்டியல்கள் வழங்கியுள்ளதின் அடிப்படையில் ஆன செலவினம் ரூ.151020/- மேற்படியாருக்கு ரொக்கமாக வழங்க மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு :-

மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.11405/எச்2/2018)

தீர்மானம் எண்:- 247 அனுமதி அளிக்கப்பட்டது

24. அ) காஞ்சிபுரம் பெருநகராட்சிக்கு புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு Detailed Projects Report (Plan, Elevation Sections, Structural Analysis, Detail Estimate and Bid Documents for PPP Mode) ஆகியவற்றை தயார் செய்ய 22.10.2019 அன்று விலைபுள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விலைபுள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | M/s. Terra Amata Design Consortium | 5,78,200/- |
| 2 | M/s. M Square Architects | 6,37,200/- |
| 3 | M/s. JPR Architects and Engineers | 6,60,800/- |

எனவே கிடைக்க பெற்றுள்ள விலைபுள்ளிகளில் குறைவான மதிப்பீடு கொண்டுள்ள M/s. Terra Amata Design Consortium நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ஆ) காஞ்சிபுரம் பெருநகராட்சிக்கு புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு Detailed Feasibility Assessment Report (Feasibility Assessment Report as per TNIDB Format, Project Concept Note, Topography Survey, Soil Test and Traffic Survey Report etc.,) ஆகியவற்றை தயார் செய்ய 22.10.2019 அன்று விலைபுள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | M/s. Terra Amata Design Consortium | 5,66,400/- |
| 2 | M/s. M Square Architects | 6,13,600/- |
| 3 | M/s. JPR Architects and Engineers | 6,43,100/- |

எனவே கிடைக்க பெற்றுள்ள விலைபுள்ளிகளில் குறைவான மதிப்பீடு கொண்டுள்ள M/s. Terra Amata Design Consortium நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண்:- 248 அனுமதி அளிக்கப்பட்டது.

25.அ) இந்நகராட்சியில் வணிக உபயோகத்திற்காக புதைவடிகால் இணைப்பு பெற்று பயன்படுத்தி வந்த கீழ்கண்ட பயனாளிகள் தங்களது வணிக புதை வடிகால் இணைப்பினை குடியிருப்பு பயன்பாடாக மாற்ற வேண்டி விண்ணப்பித்துள்ளார்.

| வ. எண் | பெயர் | முகவரி | புதை வடிகால் இணைப்பு எண் |
|---|---|---|---|
| 1 | **R.** புஷ்பாவதி | **No.91A,** புதுப்பாளையம் தெரு, பிள்ளையார்பாளையம், காஞ்சிபுரம். | 008/15606 |
| 2 | **S.** சண்முகம் | **No.9B,** வீரகாளி அம்மன் கோயில் தெரு, பிள்ளையார்பாளையம், காஞ்சிபுரம். | 008/13589 |

மேற்படி விண்ணப்பதாரர் கோரிக்கையின்படி நேரில் சென்று ஆய்வு செய்து உறுதி செய்யப்பட்டது. மேலும் 2012-13 II முதல் வணிக உபயோகத்திலிருந்து குடியிருப்பு உபயோகமாக மாற்றி கணினி கேட்பில் திருத்தம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ஆ) இந்நகராட்சியில் வணிக உபயோகத்திற்காக புதைவடிகால் இணைப்பு பெற்று பயன்படுத்திவந்த கீழ்கண்ட பயனாளிகள் தங்களது வணிக புதைவடிகால் இணைப்பினை குடியிருப்பு பயன்பாடாக மாற்ற வேண்டி விண்ணப்பித்துள்ளார்.

| வ. எண் | பெயர் | முகவரி | புதை வடிகால் இணைப்பு எண் |
|---|---|---|---|
| 1 | **G.** சாந்தி | **No.**4**A,** வீரகாளி அம்மன் கோயில் தெரு, பிள்ளையார்பாளையம், காஞ்சிபுரம். | 008/13577 |
| 2 | திருமதி. கிரிஜா அம்மாள் | **No.19,** பஞ்சுபேட்டை சின்ன தெரு, காஞ்சிபுரம். | 008/1223 |

மேற்படி விண்ணப்பதாரர் கோரிக்கையின்படி நேரில் சென்று ஆய்வு செய்து உறுதி செய்யப்பட்டது. மேலும் மார்ச் 2020 வரை புதைவடிகால் கட்டணங்களை நிலுவையின்றி செலுத்தியுள்ளார். எனவே மேற்படி தவறான புதைவடிகால் கேட்பை ரத்து செய்து புதிய சரியான புதைவடிகால் கேட்பிணை கணினி பதிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

இ) இந்நகராட்சியில் இணைப்பு பெற்று பயன்படுத்திவந்த கீழ்கண்ட பயனாளிகள் தங்களது புதைவடிகால் கேட்பை ரத்து செய்ய விண்ணப்பித்துள்ளார்.

| வ. எண் | பெயர் | முகவரி | குடிநீர் இணைப்பு எண் |
|---|---|---|---|
| 1 | திரு. கணேசன் | அம்பேத்கர் தெரு (வார்டு 51)<br>செவிலிமேடு, காஞ்சிபுரம் | 008/051/01122 |

மேற்படி விண்ணப்பதாரர் கோரிக்கையின்படி நேரில் சென்று ஆய்வு செய்து உறுதி செய்யப்பட்டது. மேலும் புதைவடிகால் கட்டணம் தவறுதலாக வரபெற்றுள்து. மேலும் மார்ச் 2020 வரை புதைவடிகால் கட்ணங்களை நிலுவையின்றி செலுத்தியுள்ளார். எனவே மேற்படி புதைவடிகால் இணைப்பை கணினியிலிருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.3783/2019/இ4)

*தீர்மானம் எண்:-* 249 அனுமதி அளிக்கப்பட்டது.

26. காஞ்சிபுரம் பெருநகராட்சி வார்டு எண்.32 விளக்கடி கோயில் தெருவிலுள்ள திரு.C.R. பாஸ்கரன் மற்றும் லஷ்மிதேவி ஆகியோருக்கு சொந்தமான கட்டிடத்தில் நகராட்சி பள்ளி மாத வாடகை அடிப்படையில் இயங்கி வந்தது. மேற்படி கட்டிட உரிமையாளர்கள் மாத வாடகை குறைவாக உள்ளதால் Rent Control Act படி வாடகை உயர்வு செய்து தருமாறு மாவட்ட Rent Controller நீதிமன்றம், காஞ்சிபுரம், ஆணையர், காஞ்சிபுரம் பெருநகராட்சி அவர்களின் பிரதிவாதியாக சேர்த்து RCOP 2 / 1998-ல் வழக்கு தொடரப்பட்டது. மேற்படி வழக்கின் விசாரணை இறுதி முடிவில் Rent Control Act படி மாத வாடகை ரூ.20,500/- நிர்ணயம் செய்து வழங்குமாறு உத்தரவிடப்பட்டது. மேற்படி உத்தரவின் மீது தொகை வழங்கவில்லை என மீண்டும் மாவட்ட நீதி மன்றத்தில் ஆணையரை பிரதிவாதியாக வழக்கு எண்.16/2000-ல் வழக்கு தொரடப்பட்டது. மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அதன் பேரில் கட்டிடத்தின் உரிமையாளருக்கு நிலுவை வாடகை பாக்கை தொகை வழங்காத்தால் மீண்டும் நீதிமன்றத்தினை அணுகி வழக்கு எண்.RCA No.21/2012-ல் ஆணையரை பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடரப்பட்டது. அவ்வழக்கிலும் நீதிமன்றத்தின் வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

அவ்வழக்கின்படி நிலுவை வாடகை வழங்க O.S.No.8/2018, District Court II-ல் வழக்கு தொடரப்பட்டு அதிலும் கட்டிட உரிமையாளருக்கு சாதகமாக வந்த நிலையில் அதன் நடைமுறைப்படுத்த வேண்டி நகராட்சி எதிர்த்து E.P.No.62/2018 வழக்கில் நகராட்சி அசையா சொத்துக்களை ஜப்தி செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது. இவ்வுத்திரவின் பேரில் நகராட்சி சார்பில் E.A.126/2018-ல் எதிர்த்து நகராட்சி மேல் முறையீடு செய்த்தில் விசாரணை செய்து அவ்வழக்கினையும் தள்ளுபடி செய்யப்பட்டது.

தள்ளுபடி செய்யப்பட்ட E.A. No.126/2018-ல் வழங்கப்பட்ட உத்திரவில் நகராட்சி அசையா சொத்துக்களை ஜப்தி செய்ய வேண்டி 30.08.2018 அன்று உத்திரவு இடப்பட்டது.

அதன் அடிப்படையில் 03.10.2019-ல் நீதிமன்றத்தில் பணிபுரியும் Senior Bailiff அலுவலகத்திற்கு வந்து நீதிமன்ற உத்திரவினை எங்களுக்கு தெரிவித்து அசையா சொத்துக்களை ஜப்தி நடவடிக்கை மேற்கொள்ள வந்தார்கள். அதனை நகராட்சி சார்பில் ஆட்சேபணை செய்த்தில் நீதிமன்ற அலுவலர்கள் திரும்பி சென்றுவிட்டனர். அதன் பிறகு வழக்கறிஞர் திரு.P. ராஜி அவர்களை நகராட்சி சார்பில் நியமனம் செய்து அசல் வழக்கு எண்.8/2018-ல் மாண்புமிகு நீதிமன்றம் ஒருதலைபட்சமாக தீர்ப்பளித்துள்ளது. அவ்வாறு ஒருதலைபட்சமாக வழங்கப்பட்டுள்ள தீர்ப்பினை எதிர்த்து (Order 9 Rule 13 and Section 5 Limition Act) படியும் நகராட்சி சார்பில் எங்களுடைய நிலவ்ரத்தினை பதில் உரை தாக்கல் செய்யப்பட்டு நிலுவையிலுள்ளது. மேலும் நீதிமன்ற பதிவேட்டில் S.R.No.9070/2018 பதியப்பட்டு இடையிலை வரிசை எண் வழங்காமல் நிலுவையிலுள்ளது என தெரிவித்து E.P.62/2018 & O.S.No.8/2018 வழங்கப்பட்டுள்ள உத்திரவினை ஆட்சேபித்து -ல் வழக்கு தொடரப்பட்டது.

அவ்வழக்கு 16.10.2019 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அவ்வழக்கினை விசாரணை செய்த மாண்புமிகு நீதியரசர் அவர்கள் மேற்படி வழக்கில் நகராட்சி சார்பில் ஒரு பகுதி தொகையினை ரூ.3,00,000/- நீதிமன்றத்தில் செலுத்தியபிறகுதான் இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என நீதியரசர் தெரிவித்தார். அதன்பேரில் நகராட்சி வழக்கரிஞர் திரு.P. ராஜி அவர்களின் 17.10.2019 தேதிய கடிதத்தில் ரூ.3,00,000/- திரு.C.R. பாஸ்கரன் பெயரில் காசோலையாக நீதிமன்றத்தில் வழங்குமாறு கடிதம் வழங்கியுள்ளார்.

எனவே மேற்படி வழக்கில் நகராட்சி ஜப்தி நடவடிக்கை தவிர்க்கும் பொருட்டும், மேலும் கட்டிட உரிமையாளருக்கு வழங்க வேண்டிய வாடகை பாக்கியில் ஒரு பகுதி ரூ.3,00,000/- ஐ நீதிமன்றத்தில் வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :-</u>

E.A.126 / 2018-ல் வழங்கப்பட்டுள்ள உத்திரவில் நகராட்சி அசையா சொத்துக்களை ஜப்தி செய்ய தவிர்க்கும் பொருட்டும் மற்றும் நிர்வாக நலன் கருதியும் அவசர அவசியத்தை முன்னிட்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ரூ.3,00,000/- செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண்:- **250** அலுவலக குறிப்பின்படி ஒப்புதல் அளிக்கப்பட்டது.

27. காஞ்சிபுரம் பெருநகராட்சிக்கு உட்பட்ட வரதராஜ பெருமாள் கோயில் கோபுரம் மேற்கு தெருவில் வடபுறம் உள்ள சாலையில் சிமெண்ட் தளம் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசரம் கருதி நகர மன்ற அனுமதியினை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

தீர்மானம் எண்:- 251 அனுமதி அளிக்கப்பட்டது

28. காஞ்சிபுரம் பெருநகராட்சிக்கு உட்பட்ட வரதராஜ பெருமாள் கோயில் கோபுரம் மேற்கு தெருவில் தென்புறம் உள்ள சாலையில் சிமெண்ட் தளம் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசரம் கருதி நகர மன்ற அனுமதியினை எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

தீர்மானம் எண்:- 252 அனுமதி அளிக்கப்பட்டது

நகராட்சி அலுவலகம். (ஒம்) கா. மகேந்திரன்

காஞ்சிபுரம்.
நாள்:- 31.10.2019.

தனி அலுவலர்,
காஞ்சிபுரம் பெருநகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையர்(பொ)
காஞ்சிபுரம் பெருநகராட்சி.